பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 699 **நாள்: 19.11.2026**

இன்று (19.11.2026) சென்னை கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநகராட்சி இணை ஆணையர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., அவர்கள், ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில், சென்னை மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவிகளிடையே வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி மற்றும் வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இன்று (19.11.2026) சென்னை கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநகராட்சி இணை ஆணையர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., அவர்கள், ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில், சென்னை மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவிகளிடையே வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி மற்றும் வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் 674 பள்ளிகள், 49 கல்லூரிகள் மற்றும் 3 பல்கலைக்கழங்கள் என அனைத்து நிலையிலுள்ள எழுத்தறிவு கழகங்கள் (Electoral Literacy Clubs) வாயிலாக 90 ஆயிரம் மாணவர்களுக்கு மேல் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, தற்போது சென்னை தேர்தல் மாவட்டத்தில் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில், கல்லூரிகளில் மற்றும் பல்கலைக்கழகங்களில் முதல் நிலையில் 02.11.2026 முதல் 07.11.2026 வரை தூய்மையான வாக்காளர் பட்டியலின் முக்கியத்துவம் மற்றும் வாக்குரிமையைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம், (Importance of pure Electoral Roll / Importance of Voting) என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும்,வாக்காளர் பட்டியல் தயாரித்தல்/ மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு காகிதத் தணிக்கைச் சீட்டு

(VVPAT) / வாக்குப்பதிவு நடைமுறை மற்றும் வாக்கு எண்ணும் நடைமுறை (Electoral Roll Preparation, EVM & VVPAT, The Polling Process & Counting Process) என்ற தலைப்பில் வினாடி – வினா போட்டியும் நடைபெற்றது.

இரண்டாவது நிலையில் சென்னை தேர்தல் மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில் 10.11.2026 முதல் 13.11.2026 வரை போட்டிகள் நடத்தப்பட்டு, கட்டுரைப்போட்டிக்கு ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் தலா 10 மாணவர்கள் எனவும், வினாடி வினா போட்டிக்கு ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் தலா 10 மாணவர்கள் எனவும் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பின்னர், மூன்றாவது நிலையில் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகம் வாயிலாக இன்று (19.11.2026) ஏற்கனவே வெற்றி பெற்றவர்களில் ஒவ்வொரு போட்டிக்கும் தலா 10 மாணவர்கள் கட்டுரைப் போட்டியிலும் மற்றும் வினாடி - வினா போட்டியிலும் பங்கேற்று அதில்வெற்றி பெற்ற 10 மாணவ, மாணவியருக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திருமதி நா.பூஷ்ணாதேவி, மாநகராட்சி கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் தேர்தல் தொடர்பான அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.